## மாமன்றக் கூட்டம்

**நாள்** **- 11.11.2016 வெள்ளிக்கிழமை**

**வருகை** **- டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கோப்பு எண் -ந.க.எண் (9677/2016/ MC 8)**

---

### பொருள் எண் 1

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் – தனிஅலுவலராக பொறுப்பேற்றது – மாமன்றத்தில் பதிவு செய்வது – தொடர்பாக.

**பார்வை** 1 தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட (3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016 (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) நாள்.17.10.2016

2 அரசாணை (எம்எஸ்) எண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு (தேர்தல்கள்) துறை, நாள்.24.10.2016.

----

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில் பிரிவு எண்.511–AAA பார்வை 1ல் காணும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட ( 3வது சட்ட திருத்தம்) அவசர சட்டம் 2016ன் (தமிழ்நாடு அவசரச்சட்டம் 2/2016) மூலமாக சேர்க்கப்பட்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தை கவனிக்க தனி அலுவலர் நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்வை 2ல் காணும் அரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை III ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஆணையாளர் அவர்கள் கோயம்புத்தூர் மாநகராட்சி தனி அலுவலராக நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து டாக்டர்.க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்கள் 25.10.2016 முற்பகல் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தனி அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பதிவு செய்யலாம். ந.க.எண்.9129/2016/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 106 நாள் 11.11.2016**

பதிவு செய்யப்பட்டது.

---

### பொருள் எண் 2

**பொருள் :** பணியமைப்பு –கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர்–கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் 3 வருட காலத்திற்கு மாற்றம் செய்வது குறித்து மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (ப) எண்.481, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.5) துறை, நாள். 24.11.2011.
2. அரசாணை (ப) எண்.425, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மாந.4)துறை, நாள். 01.07.2015.
3. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை நாள். 23.07.2015.
4. ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6286/2016/எம்சி1, நாள். 15.03.2016 மற்றும் 28.06.2016.

5. திருமதி. விஜயலட்சுமி, இளநிலைப் பொறியாளர் அவர்களின் விண்ணப்பம் நாள். 11.07.2016.
6. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21157/2016/எப்4, நாள்.03.08.2016.
7. ஆணையாளர் அவர்களின் ஆணை நாள். 06.10.2016.

-----

திருமதி. விஜயலட்சுமி, இளநிலைப் பொறியாளர், சேலம் மாநகராட்சி அவர்கள், பார்வை 2–ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 3–ல் காணும் ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும், இம்மாநகராட்சியில் 15.07.2015 அன்று முற்பகல் முதல் இளநிலைப் பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 4–ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி, திருமதி. விஜயலட்சுமி, இளநிலைப் பொறியாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சியில் இளநிலைப் பொறியாளராக 15.07.2015ல் பணியில் சேர்ந்து, 17.07.2015 முதல் 08.09.2015 முடிய 54 நாட்கள் மற்றும் 11.11.2015 முதல் 10.12.2015 முடிய 30 நாட்கள் மருத்துவ விடுப்பினை, மருத்துவ விடுப்பு இருப்பு இல்லாத காரணத்தால், மருத்துவச் சான்றின் பேரிலான ஈட்டிய விடுப்பாகவும், 11.12.2015 முதல் 10.12.2016 முடிய ஒரு வருட காலத்திற்கு ஊதியமில்லா விடுப்பும் அனுமதிக்கப்பட்டு, தற்பொழுது ஊதியமில்லா விடுப்பில் இருந்து வருகிறார்.

இந்நிலையில், திருமதி. விஜயலட்சுமி, இளநிலைப் பொறியாளர் அவர்கள், தான் 2012–லிருந்து 2015 ஜுன் வரை சேலத்தில் deputation அடிப்படையில் பணிபுரிந்து வந்ததாகவும், மேற்படி deputation காலம் முடிவடைந்து, தனது விருப்பத்தின்பேரில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டு, 15.07.2015 முதல் பணிபுரிந்து வருவதாகவும், மார்ச் 2015ல் meniscus tear ஏற்பட்டு arthroscopy செய்யப்பட்டு மருத்துவ விடுப்பில் இருந்து, மீண்டும் செப்டம்பர் 2015ல் பணியில் சேர்ந்து 2 மாதங்கள் பணிபுரிந்து வந்ததில், தனது கால்வலி அதிகமானதால் நவம்பர் 2015–லிருந்து ஒரு வருட காலத்திற்கு ஊதியமில்லா விடுப்பு எடுத்துள்ளதாகவும், தான் widow என்பதாலும், . தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால், ஒரு வருடம் மருத்துவ விடுப்பிலும், அடுத்த ஒரு வருடம் ஊதிமில்லா விடுப்பிலும் இருந்து வருவதாகவும், மேலும் ஊதியமில்லா விடுப்பினை நீட்டிக்கும் நிலையில் குடும்ப சூழ்நிலை இல்லை என்பதால், கோவையில் தனியாக இருந்து அலுவலகப் பணிகளை செய்துவிட்டு வீட்டில் தன்னை கவனிக்க முடியாத சூழ்நிலையில், வயதான பெற்றோர்களால் கோவைக்கு வந்து தன்னை கவனிக்க முடியாத சூழ்நிலை உள்ளதாகவும் மேலும், தனது கால்வலி இன்னும் முழுமையாக குணமடையாத காரணத்தால், தன்னை மீண்டும் சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் மூன்று வருடங்களுக்கு மாற்றம் செய்தால், சேலத்தில் தன்னை கவனித்துக் கொள்ள தனது பெற்றோர்கள் மற்றும் இரு அண்ணன்கள் உள்ளதாகவும், எனவே தனது சூழ்நிலையை கருதி, மீண்டும் சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் 3 வருட காலத்திற்கு மாற்றக் கோரி பார்வை 5–ல் காணும் 11.07.2016–ம் தேதிய விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே திருமதி. விஜயலட்சுமி, இளம் பொறியாளர் அவர்களின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டு அவரை சேலம் மாநகராட்சிக்கு அயற்பணி அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 6067 /2015/எம்சி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 107 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் – திட்டத்தின் அனைத்து பணிகளையும் கணினி மூலம் இயக்கி பராமரித்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. Sun Industrial Automation & Solutions, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது – தொடர்பாக.

------

கோவை மாநகராட்சி பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 159.85 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இக்குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நீரேற்று நிலையம், நீரேற்று பிரதான குழாய், சுத்திகரிப்பு நிலையம், மேல்நிலைத் தொட்டி மற்றும் பிரதான குழாயில் அமைக்கப்பட்டுள்ள வால்வுகள் உள்ளிட்ட குடிநீர் திட்டத்தின் அனைத்து இயக்கங்களையும் கணினி மூலம் இயங்கச் செய்தல், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தன்மை, குடிநீரின் அளவு மற்றும் அழுத்தம் ஆகியவற்றை கணினி மூலம் ஒரே சீராக பராமரிக்கும் முறையினை (Supervisory Control And Data Acquisition - SCADA) செயல்படுத்த 2010–11ம் ஆண்டின் பகுதி–II (Part-II) திட்டத்தின்கீழ் ரூ. 600.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள மாமன்றத் தீர்மான எண் 268, நாள் 12.03.2010–ல் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. இதில் மாநில அரசு மானியத் தொகையாக ரூ. 400.00 இலட்சம் அரசாணை (Ms) எண். 106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC II) துறை, நாள் 07.06.2010–ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ. 600.00 இலட்சம் தற்போது ரூ. 500.00 இலட்சமாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணியினை ரூ. 500.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி பெற கடந்த 07.01.2016–ல் மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு, கடந்த 21.01.2016–ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதியும், 22.01.2016–ல் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.

இப்பணிக்கு கடந்த 29.02.2016–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1. M/s. Sun Industrial Automation & Solutions, Chennai.
2. M/s. Swathi Enterprises, Nashik.
3. M/s. Godrej & Boyce Mfg. Co. Ltd, Mumbai

இவற்றில் M/s. Swathi Enterprises, Nashik என்ற நிறுவனம் டேவணித் தொகை வழங்காததால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் 29.02.2016–ல் திறக்கப்பட்டதில் இரு நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் 10.06.2016–ல் விலைப்புள்ளிகள் திறக்கப்பட்டது. இவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Sun Industrial Automation & Solutions, Chennai நிறுவனத்திடம் விலைகுறைப்பு கோரியதில் மேற்படி நிறுவனம் விலைக்குறைப்பு செய்து வழங்கிய விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழஙகிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தின் அனைத்து இயக்கங்களையும் கணினி மூலம் இயஙகச் செய்தல், சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தன்மை, குடிநீரின் அளவு மற்றும் அழுத்தம் ஆகியவற்றை கணினி மூலம் ஒரே சீராக பராமரிக்கும் முறை (Supervisory Control And Data Acquisition - SCADA) | ரூ. 44086917/– | M/s. Godrej & Boyce Mfg. Co. Ltd, Mumbai | ரூ. 55812500/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 22.67 % அதிகம் |
| | | | M/s. Sun Industrial Automation & Solutions, Chennai. | ரூ. 51724000/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 17.32 % அதிகம் |
| | | | | முதல் விலைக்குறைப்பு நாள் 13.06.2016 ரூ. 48000000/– | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 8.88 % அதிகம் |
| | | | | இரண்டாவது விலைக்குறைப்பு நாள் 17.06.2016 ரூ. 46275000/– | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.96 % அதிகம் |

இப்பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி பெற முன்னேற்பு வழங்கியதற்கும், விலைகுறைப்பிற்குப் பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **4,62,75,000/– (4.96% அதிகமாக)** வழங்கிய தி/ள். சன் இண்டஸ்ட்ரியல் ஆட்டோமேசன் அண்டு சொலியூசன், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கும் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அ) இப்பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதி பெற மாண்புமிகு மேயர் முன்னேற்பு வழங்கியதற்கு பின்னேற்பும், விலைகுறைப்பிற்குப் பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. **4,62,75,000/– (4.96% அதிகமாக)** வழங்கிய தி/ள். சன் இண்டஸ்ட்ரியல் ஆட்டோமேசன் அண்டு சொலியூசன், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கு ஒப்புதலும் வழங்கலாம்.

ஆ) அனுமதிக்கப்பட்ட மாநில அரசு மானிய நிதி ரூ. **400.00** இலட்சம் போக மீதமுள்ள ரூ. **100.00** இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். **2924/09/ஜே.என்5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 108 நாள் 11.11.2016**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 32-க்குட்பட்ட 4 (நான்கு) மாநகராட்சி பொதுக் கழிப்பிடங்களுக்கு மராமத்து செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.7,80,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9673/2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 109 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 33-க்குட்பட்ட 6 (ஆறு) மாநகராட்சி பொதுக் கழிப்பிடங்களுக்கு மராமத்து செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.10,30,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9674/2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 110 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 34-க்குட்பட்ட 10 (பத்து) மாநகராட்சி பொதுக் கழிப்பிடங்களுக்கு மராமத்து செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.19,50,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9675/2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 111 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 35-க்குட்பட்ட 2 (இரண்டு) மாநகராட்சி பொதுக் கழிப்பிடங்களுக்கு மராமத்து செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.5,80,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9676/2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 112 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 32-க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4,70,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 10021/2016/டி1(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 113 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 33-க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.3,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 10022/2016/டி1(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 114 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 34-க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4,95,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 10023/2016/டி1(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 115 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 35-க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4,50,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 10024/2016/டி1(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 116 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பூங்காக்கள் பராமரிக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.75,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

2015-16-ம் ஆண்டிற்கான பூங்காக்கள் பராமரிப்பிற்கான மதிப்பீடு ரூ.75,00,000/-க்கு தயாரிக்கப்பட்டு, அதற்கான பணிக்காலம் 20.10.16-ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே இந்நிதியாண்டிற்கான பூங்காக்கள் பராமரிப்பு பணிக்கான மதிப்பீடு ரூ.75,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9688 /2016/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 117 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 59-க்கு உட்பட்ட ரேணுகா நகர் பகுதியில் மறு தார்தளம் அமைத்தல். | 20.00 | 08.09.16 முதலாம் அழைப்பு | 1). திருமதி. வி.மீனாள் 0.03%குறைவு<br>2). தி/ள் வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 2.46 %அதிகம் | திருமதி. வி.மீனாள் 0.03%குறைவு |

மேற்படி பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.206/2016/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 118 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 14**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4746/ 2016/ எம்டி4 | வார்டு எண் 76க்குட்பட்ட சிஜிவி மெயின் மற்றும் குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 29.75 | 06.09.16 முதலாம் அழைப்பு | 1).தி/ள் சி.ஆர் கன்ஸ்ட்ரக்சன் 0.06%குறைவு<br>2)தி/ள்ஆர்.வி.பி. பாலமுருகன் 17.14%அதிகம் | தி/ள் சி.ஆர் கன்ஸ்ட்ரக்சன் 0.06%குறைவு |
| 2 | 12182/ 2015/ எம்டி2 | வார்டு எண் 43க்குட்பட்ட உருமாண்டம்பாளையம் பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 26.08.16 முதலாம் அழைப்பு | 1).தி/ள் அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.05%குறைவு<br>2). தி/ள் என்.எம். எஸ் இன்ஜினீயர்ஸ் 0.01 %அதிகம் | தி/ள் அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.05%குறைவு |
| 3 | 12183/ 2015/ எம்டி2 | வார்டு எண் 26க்குட்பட்ட வட்டமலைபாளையம் பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்டுதல் | 15.00 | 26.08.16 முதலாம் அழைப்பு | 1).தி/ள் அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.07%குறைவு<br>2). தி/ள் என்.எம். எஸ் இன்ஜினீயர்ஸ் 0.04 %குறைவு | தி/ள் அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.07%குறைவு |

மேற்படி, பட்டியலில் உள்ள இப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண்.4746/2016/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 119 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

**பொருள் :** சாலை இணைப்பு – தனியார் பேச்சுவார்த்தை – நில எடுப்பு – வடவள்ளி கிராமம் க.ச.எண்.25/2 – மருதமலை சாலை – கவுண்டம்பாளையம் சாலை இணைப்பு – தில்லை நகர் பிரதான சாலை துண்டிப்பு – தனியார் நில எடுப்பு மூலம் இணைப்பு உத்தேசம் இழப்பீடு தொகை மற்றும் சாலை உருவாக்கம் – கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை :**
1. மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம் வேண்டுகோள்.
2. பொதுமக்கள் தில்லை நகர் குடியிருப்போர் நலச் சங்கம் மனுக்கள் நாள். 02.09.2016.
3. வடவள்ளி பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.76 நாள்.18.07.2003.
4. செயல் அலுவலர், வடவள்ளி பேரூராட்சி கடிதம் நாள் 30.07.2003. ந.க.எண்.234/01 நாள் 30.07.2003.
5. நில உரிமையாளர்களின் சம்மத கடிதம் நாள். 12.09.2016
6. கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் நகரளவையர் குறிப்பு மற்றும் வரைபடம் நாள் 12.09.2016.

***********

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்,16, வடவள்ளி கிராமம், க.ச.எண்.25/2 பகுதியில், மருதமலை சாலையிலிருந்து வடக்கு நோக்கி கவுண்டம்பாளையம் சாலை இணைப்பினை ஏற்படுத்த தனியார் பூமியில் சுமார் 10.03 சென்ட் பரப்பளவு நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தி பிரதான சாலை இணைப்பு செய்ய வேண்டியது அவசர அவசியமாக உள்ளது.

இப்பகுதி மக்கள், மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் S.P.வேலுமணி M.A., M.Phil., மற்றும் வடக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு.P.R.G.அருண்குமார் அவர்களை பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமின்போது போக்குவரத்து நெருக்கடி, உயிரிழப்புகளை தவிர்க்கும் பொருட்டு இணைப்பு சாலை பணியினை நிறைவேற்றித் தரும்படி கோரிக்கை நேரில் சந்தித்து சமர்ப்பித்தனர்.

மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர், வடக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அறிவுரையின்படி உத்தேச இணைப்பு சாலை தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்காண் பொருள் தொடர்பாக வடவள்ளி பேரூராட்சியாக இருந்த காலத்தில், கோப்பு எண் 234/2001ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வடவள்ளி பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண்.76 நாள் 18.07.2003ல் வடவள்ளி பேரூராட்சி நிதியிலிருந்து வழங்கி 5777 சதுரடி (13.26 சென்ட்) நிலத்தை கையகப்படுத்தி, பிரதான மருதமலை சாலை – கவுண்டம்பாளையம் சாலையினை, பேரூராட்சி நிதியிலிருந்து இணைப்பு சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

நகரளவையர் புல தணிக்கை வரைபடத்தின்படி, இணைப்பு சாலைக்கு நில எடுப்பு செய்ய சம்மந்தப்பட்ட நில உரிமையாளரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள் **1.திரு.முருகானந்தம் (1858 சதுரடி) த/பெ.T.M.நடராஜன் 2.M.உமாபிரியா க/பெ. N.பழனிவேல் (2510 சதுரடி)** தமக்கு சொந்தமான நிலத்தினை நகரளவை ஆவணங்களின்படி 4368 சதுரடி பரப்பினை 40 அடி சாலை இணைப்பு சாலை பணிக்கு, தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி, இழப்பீடு வழங்கும்பட்சத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு கிரயம் செய்து ஒப்படைக்க தயாராக உள்ளதாக கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் பொதுமக்களின் நலன் கருதி நில உரிமையாளர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்தில் சாலைப் பணியினை செய்து கொள்ளவும், பொது மக்கள் உபயோகம் செய்து கொள்ளவும் இசைவு உறுதிமொழி பத்திரம் சமர்ப்பித்துள்ளனர்.

மேற்காண் இணைப்புச் சாலைக்கு உரிய வழிகாட்டி மதிப்பு ரூ.1000/– (சதுரடி 1–க்கு) என பதிவுகள், பதிவு துறை ஆவணத்தில் இணைய தளம் மூலம் பெறப்பட்டுள்ளது. அதன்படி மொத்த நிலமதிப்பு தொகை ரூ.43,68,000/– இழப்பீட்டுத் தொகையாக நில உரிமையாளர்களுக்கு வழஙகப்பட வேண்டி உள்ளது. மேற்காண் இழப்பீட்டுத் தொகை, கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து ஒதுக்கீடு பெற்று பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் இணைப்பு சாலை நிறைவு அடைந்தால் கீழ்கண்ட உடனடி வசதிகளை பொதுமக்கள் பெற வாய்ப்பு உள்ளது.

1. மருதமலை சாலையிலிருந்து, லாலி ரோடு முதல் மேற்கு நோக்கி 10 கி.மீ தூரத்திற்கு போதுமான இணைப்பு சாலை இல்லாததால் மருதமலை சாலையின் இருபுறம் வடபுறம் பகுதியிலான, வடவள்ளி, பி.என்.புதூர், வெஙகிட்டாபுரம், வேலாண்டிபாளையம், நேதாஜி காலனி, காந்தி நகர், வசந்த் நகர், கோவில்மேடு, இடையர்பாளையம், கணுவாய், TVS நகர், நவாவூர், ஹவுசிங யூனிட், சோமையம்பாளையம், பொம்மணம்பாளையம், VNR நகர், ஓணாபாளையம், கல்வீரம்பாளையம், தொண்டாமுத்தூர், கலிக்கநாயக்கன்பாளையம், கவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளை சேர்ந்த சுமார் 3 இலட்சம் பொதுமக்கள், பாதுகாப்பான போக்குவரத்து வசதி பெற வழிவகை ஏற்படும்.

2. மேற்காண் பகுதியில் முக்கிய சுற்றுப்புறத் தளமான மருதமலை உள்ளது. மேலும் பாரதியார் பல்கலைக்கழகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அவிலா கான்வென்ட், மாநகராட்சி மற்றும் அரசு துவக்கப்பள்ளி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர், மருத்துவமனை ஊழியர்கள், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், பணியாளர் மற்றும் குழந்தைகள், போக்குவரத்து நெருக்கடி காரணமாக, காலதாமதஙகள், விபத்துக்கள் ஏற்பட்டு கடுமையாக பாதிக்கப்படுவதில் இருந்து தீர்வு ஏற்படும்.

3. மேலும் மருதமலை சாலையின் இருபுறஙகளையும் குறுக்கே கடந்து செல்வதற்கு இயலாத சூழ்நிலை தற்சமயம் போக்குவரத்து வாகனஙகளின் எண்ணிக்கை (High Traffic Volume) இருப்பதால் மூத்த குடிமக்கள் பள்ளிக் குழந்தைகள், பணியாளர்கள், பக்தர்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் தொழில் துறையினர் பல லட்சக் கணக்காணோர் பயன்பெற வழிவகை உள்ளது.

4. லாலிரோடு சந்திப்பு, GCT சந்திப்பு, வெஙகிட்டாபுரம் சந்திப்பு, வேலாண்டிபாளையம் சந்திப்பு, இடையர்பாளையம் சந்திப்பு, மற்றும் தடாகம் பிரதான சாலை ஆகிய சாலைகளில் 50 ஆண்டு கால போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு ஏற்படும்.

5. கோயம்புத்தூர் மாநகரின் பிரதான பகுதியான வடவள்ளி சந்திப்பு பகுதியில் மேற்காண் இணைப்பு சாலை உத்தேசம் நிறைவேற்றும் பட்சத்தில் பல லட்சக் கணக்கான பொதுமக்கள், மூத்த குடிமக்கள், பள்ளிக் குழந்தைகள், தொழிலாளர்கள், பணியாளர்கள், பக்தர்கள், அலுவலர்கள் மற்றும் தொழில் துறையினர் பல லட்சக் கணக்காணோர் பயன்பெற வழிவகை உள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் போக்குவரத்து நெருக்கடி களைய மருதமலை சாலை, கவுண்டம்பாளையம் சாலை இணைப்பு உத்தேசம், ரூ.43,68,000/– நிலமதிப்பு இழப்பீடு தொகை வழஙகி, மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர், அறிவுரைப்படியும் மற்றும் வடக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படியும் செயல்படுத்த வழிவகை உள்ளது. மேற்காண் உத்தேசத்திற்கு உள்ளூர் திட்டக் குழும உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு அனுமதி வழஙகும் பொருட்டு மாமன்றத்திற்கு பொருளுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண். 9717/2016/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 120 நாள் 11.11.2016</u>**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 16

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் டாடாபாத் பிரிவு வார்டு எண் **54**ல் காளிதாஸ் சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.**44,45,000**/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9548/**2016**/எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 121 நாள் 11.11.2016</u>**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 17

கோயம்புததூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்கள் 95, 97 மற்றும் 99 க்கு உட்பட்ட பகுதியில் கீழ்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது

| வ.எ ண் | கோப்புஎண் | பணியன் பெயர் | மதிப்பீடுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 9461/2016/MD4 | வார்டு எண் 97 க்குப்பட்ட கொண்டீஸ் காலனி பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரியம் குடியிருப்புகளுக்கு பின்னால் உள்ள இடத்தில் கழிப்பிடம் கட்டுதல் பணி | 9.98 |
| 2 | 9460/2016/MD4 | வார்டு எண் 97 க்குப்பட்ட கொண்டீஸ் காலனி பகுதியில் பெண்கள் கழிப்பிடம் கட்டுதல் பணி | 9.98 |
| 3 | 9459/2016/MD4 | வார்டு எண் 97 க்குப்பட்ட கொண்டீஸ் காலனி பகுதியில் ஆண்கள் கழிப்பிடம் கட்டுதல் பணி | 9.98 |
| 4 | 9303/2016/MD4 | வார்டு எண் 85 க்குப்பட்ட செட்டிவீதி பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 5 | 9301/2016/MD4 | வார்டு எண் 95 க்குப்பட்ட அணைமேடு பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 6 | 9302/2016/MD4 | வார்டு எண் 95 க்குப்பட்ட கருப்பராயன் கோவில் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 3.00 |
| 7 | 9295/2016/MD4 | வார்டு எண் 97 க்குப்பட்ட கொண்டீஸ் காலனி பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 8 | 9299/2016/MD4 | வார்டு எண் 97 க்குப்பட்ட தக்காளி மார்க்கெட்பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 3.00 |
| 9 | 9300/2016/MD4 | வார்டு எண் 99 க்குப்பட்ட கருப்பராயன் கோவில் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |
| 10 | 9298/2016/MD4 | வார்டு எண் 99 க்குப்பட்ட மதுரைவீரன் கோவில் பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் | 5.00 |

மேற்காண் பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதிவேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப் படுகிறது

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 9461/2016/MD4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 122 நாள் 11.11.2016</u>**

அனுமதிக்கப்பட்டது.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 18

கோயமுத்துர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 89 மற்றும் 91-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள கீழ்க்கண்ட பொதுக்கழிப்பிடங்களை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க ஆணையாளர் அவர்கள் உத்திரவிட்டதைத் தொடர்ந்து இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 89 | வாய்க்காள்பாளையம் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் ந.க.எண்.:9150/16/டி1(தெ) | 4.00 |
| 2 | 89 | வேலாயுதம்பிள்ளை வீதி பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் ந.க.எண்.:9191/16/டி1(தெ) | 3.50 |
| 3 | 91 | சத்யா நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் ந.க.எண்.:9192/16/டி1(தெ) | 4.00 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 9150/2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 123 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 19

கோயமுத்துர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 89,90 மற்றும் 91-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை பராமரித்தல் மற்றும் பழுதடைந்த விநியோகக்குழாய்களை மாற்றி அமைத்தல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 89 | வார்டு பகுதியில் உள்ள பழுதடைந்த ஆழ்குழாய் கிணறு விநியோகக்குழாய்களை மாற்றி அமைத்தல் ந.க.எண்.:9158/16/டி1(தெ) | 3.00 |
| 2 | 89 | வார்டு பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் ந.க.எண்.:8926/16/டி1(தெ) | 5.00 |
| 3 | 89 | வார்டு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் மயானம் முதல் ராமசெட்டிபாளையம் வரை விநியோகக்குழாய் பதித்தல் ந.க.எண்.:9445/16/டி1(தெ) | 5.00 |
| 4 | 90 | வார்டு பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் ந.க.எண்.:8928/16/டி1(தெ) | 5.00 |
| 5 | 90 | வார்டு பகுதியில் உள்ள பழுதடைந்த ஆளழ்குழாய் கிணறு விநியோகக்குழாய்களை மாற்றி அமைத்தல் ந.க.எண்.:8930/16/டி1(தெ) | 2.00 |
| 6 | 91 | வார்டு பகுதியில் உள்ள பழுதடைந்த ஆழ்குழாய் கிணறு விநியோகக்குழாய்களை மாற்றி அமைத்தல் ந.க.எண்.:8927/16/டி1(தெ) | 2.00 |
| | | வார்டு பகுதியில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி | |

| | | | |
|---|---|---|---|
| 7 | 91 | பராமரித்தல்<br>ந.க.எண.:8929/16/டி1(தெ) | 5.00 |
| 8 | 91 | வார்டு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் மற்றும் விநியோகக்குழாய் பதித்தல்<br>ந.க.எண்.:9446/16/டி1(தெ) | 5.00 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 9158/2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 124 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 89,90 மற்றும் 91-க்கு உட்பட்ட பகுதியில் தார்சாலை பேட்ச் அமைத்தல் மற்றும் தார்தளம் அமைத்தல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 89,<br>90,<br>91 | வார்டு பகுதியில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்கு தார் பேட்ச் அமைத்தல்<br>ந.க.எண்.:9151/16/டி1(தெ) | 4.20 |
| 2 | 90 | லட்சுமி நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல்<br>ந.க.எண்.:9152/16/டி1(தெ) | 5.00 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 9151/2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 125 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 89-க்கு உட்பட்ட சுண்டக்காமுத்தூர் ராமசெட்டிபாளையம் நரிகொறவர் காலனி பகுதியில் பக்கவாட்டு தடுப்பு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூபாய்.3,75,000/—க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த 21.10.2016 அன்று கோயமுத்தார் மாவட்ட ஆட்சியர் அவர்களால் இயற்க்கை இன்னல்கள், வடகிழக்கு பருவ மழையினால் பாதிப்படையும் பகுதிகளை பாதுகாத்திடும் பொருட்டு நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி பகுதியில் முன்னேற்பாடு நடவடிக்கை எடுக்க அறிவுரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 8964/2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 126 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 22**

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 90-க்கு உட்பட்ட கோவைபுதுார் அம்மா உணவகத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 90 | கோவைபுதுார் அம்மா உணவகத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல்<br>ந.க.எண்:9153/16/டி1(தெ) | 1.00 |

மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 9153/2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 127 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்கள் **86**க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 9418/ 2016/ எம்டி4 | வார்டு எண்.86க்குட்பட்ட முத்து காலனி மற்றும் ஆடு அறுவை மனை பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். | 3,65,000/– |
| 2 | 9416/ 2016/ எம்டி4 | வார்டு எண்.86க்குட்பட்ட உக்கடம் லாரிபேட்டை பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். | 3,50,000/– |
| 3 | 9419/ 2016/ எம்டி4 | வார்டு எண்.86க்குட்பட்ட கல்லாமேடு மெயின்ரோடு பகுதியிலுள்ள பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். | 2,60,000/– |
| 4 | 9417/ 2016/ எம்டி4 | வார்டு எண்.86க்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் பொது கழிப்பிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். | 2,60,000/– |

மேற்காண் பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.**9418/2016**/எம்.டி.**4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 128 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்கள் **86**க்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 9926/ 2016/ எம்டி4 | வார்டு எண்.85க்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையத்தில் 100 HP மோட்டர் இயங்க VFAC Drive அமைத்தல் மற்றும் இயக்குதல் பணி (கல்லாமேடு–செல்வபுரம்) | 8,20,000/– |
| 2 | 9927/ 2016/ எம்டி4 | வார்டு எண்.85 க்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையத்தில் 100 HP மோட்டர் இயங்க MV Fanel Board மற்றும் இயக்குதல் பணி (கல்லாமேடு–செல்வபுரம்) | 8,10,000/– |

மேற்காண் பட்டியலில் உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9926/2016/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 129 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 25**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 89-க்குட்பட்ட வாய்க்கால் பாளையம் பகுதியில் சமுதாயக்கூடம் கட்ட மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் உத்திரவிட்டதைத் தொடர்ந்து மதிப்பீடு ரூபாய் 48,90,000/-க்கு தயாரிக்கப்பட்டள்ளது. மேற்படி சமுதாயக்கூடம் கட்டப்படுவதால் இப்பகுதிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதாலும் இம்மதிப்பீடு அவசியமாகிறது. எனவே மேற்படி பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்9428/2016/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 130 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது – மதிப்பீட்டுத் தொகையான ரூ.75,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டுவது தொடர்பாக.

––––––

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 5 மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, குடிசை பகுதி, மேடான பகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத்துறை சாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலத்தில் மின்தடை நேரஙகளில் ஏற்படும் குடிநீர் விநியோக தடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1) பாரதி பூங்கா 2) புலியகுளம் 3) வரதராஜபுரம் 4) கணபதி MSR மற்றும் 5) சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வரும் மதிப்பீட்டு ஒப்பந்த தொகை முடிவடையவுள்ளதால் புதிய மதிப்பீடு ரூ.75,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 9999 /2016/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 131 நாள் 11.11.2016**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2374/ 2016/ எம்டி2 | மேற்கு மண்டலம் LLR கேம்ப்ஸ் பகுதியில் சிறுவாணி குடிநீர் விநியோகம் அபிவிருத்தி பணி செய்தல் | 14.50 | 08.09.16 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர் .உமாபதி 0.10%குறைவு<br><br>2)தி/ள்.என்.எ ம்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.08%அதிகம் | திரு.ஆர் .உமாபதி 0.10%குறைவு |
